11.01.2017

தினமலர்
உண்மையின் உரைகல்

**துவரை விளைச்சல் பாதிப்பு**

ஆர்.கே.பேட்டை : பருவ மழை பொய்த்ததால், துவரை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது, துவரை அறுவடைக்கான காலம். பொங்கல் பண்டிகைக்கு பின், உடைக்கப்பட்ட துவரம் பருப்பு விற்பனைக்கு வரும். ஓராண்டுக்கு தேவையான துவரையை பகுதிவாசிகள், ஒட்டு மொத்தமாக வாங்கி இருப்பு வைத்து, பயன்படுத்துவது வழக்கம். கடந்த ஆண்டு துவரை விலை உச்சத்தில் இருந்ததால், கிலோ 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

இதை அடுத்து, துவரையை அதிகளவில் பயிரிட்டு, லாபம் பார்க்கலாம் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் இருந்தனர். ஆனால், பருவ மழை எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. மேலும், திருவள்ளூர் மாவட்டத்தை புரட்டிப்போட்ட, 'வர்தா' புயலில், துவரை செடிகளும் நாசமாகின. இதனால், விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

பல கட்டமாக பிஞ்சு விட்டுள்ள துவரை செடிகளை, ஒரே சமயத்தில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஒரே செடியில், கிளைக்கு ஒரு விதமாக காய்கள் முதிர்ச்சி அடைந்துள்ளன.

இதனால், முதிர்ந்த கிளைகளை மட்டும் தனித்தனியாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இதனால், விவசாயிகளுக்கு வேலை பளு கூடியுள்ளது. அதற்கேற்ற வருவாய், துவரையில் கிடைக்காது என்பதால், அவர்கள் அதிருப்தி அடைந்து உள்ளனர்.

மேலும், கடந்த ஆண்டு ஒரு கிலோ துவரை, 150 ரூபாய் வரை விற்பனையான நிலையில், தற்போது கிலோ, 80 ரூபாய், என, விலையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. கர்நாடக

மாநிலத்தில் இருந்து, அதிகளவில் துவரை வரத்து இருப்பதால், இந்த சரிவு என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தினகரன்

**3,617 பயனாளிகளுக்கு இலவச ஆடு, மாடுகள் கலெக்டர் அறிக்கை**

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் கஜலட்சுமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் பயனாளிகளுக்கு ஆடு, கறவை மாடுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் 15 கிராம ஊராட்சிகளில் 750 பயனாளிகளுக்கு 750 கறவை மாடுகளும், 80 ஊராட்சிகளில் 2,867 பயனாளிகளுக்கு 11,468 வெள்ளாடுகளும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 11, 12, 13 ஆகிய நாட்களில் முதல் கிராம சபை கூட்டமும், 18,19,20 ஆகிய நாட்களில் இரண்டாவது கிராம சபை கூட்டமும் நடத்தி, பயனாளிகளை தேர்வு செய்து வருகிற ஜனவரி 24ம் தேதிக்குள் பயனாளிகள் பட்டியலை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அதிகாரிகள் ஒப்படைக்க வேண்டும்.இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ரூ.40 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அனுப்பர்பாளையம்: அவிநாசி வேளா ண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 2,160 பருத்தி மூட்டைகள் வரத்து இருந்தன. இதில், ஆர்.சி.எச் ரகப்பருத்தி குவிண்டால் ரூ.5,500 முதல் ரூ.6,040 வரையிலும், டி.சி.எச். ரகம் ரூ.6,500

முதல் ரூ.7,220 வரையிலும் ஏலம் கோரினர். எல்.ஆர்.ஏ. ரகப்பருத்தி வரத்து இல்லை. மட்ட ரகம் ரூ.1,800 முதல் ரூ.2,600 வரையிலும் ஏலம் கோரினர். மொத்தம் ரூ.40.81 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 352 விவசாயிகளும், 18 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

**தேனி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் கரும்பு விளைச்சல் பாதிப்பு வியாபாரிகளும் வராததால் விவசாயிகள் கவலை**

பெரியகுளம்: தேனி மாவட்டத்தில் பொங்கலுக்கான கரும்பு விவசாயம் போதிய மழை இல்லாததால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். தேனி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தை பொங்கலுக்கு பயன்படுத்தப்படும் செங்கரும்பு சுமார் ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டுள்ளனர். இதில் தேனி மாவட்டம் பெரியகுளம் பகுதியில் காமாட்சியம்மன் கோவில் அருகில் சுமார் 300 ஏக்கரில் செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இந்த கரும்பு பயிரிடுவதற்கு அந்த கொழுத்தாடை என்று கூறப்படும் கரணைகளை முதலில் மாசி மாதத்தில் நடுகின்றனர். அதன் பின்னர் உரம், களை எடுத்தல் போன்றவற்றை செய்து 11 மாதங்களுக்கு பின்னர் தைப்பொங்கலுக்கு கரும்பு பயன்கொடுக்க ஆரம்பிக்கின்றன.இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு கரும்பு நடவு செய்ய 1 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. தற்போது ஒரு ஏக்கரில் 150லிருந்து 200 கட்டுகள் வரை கரும்பு விளைகின்றது. ஆனால் நல்ல விளைச்சல் என்றால் 300 கட்டுகள் வரை விளையும் என்கின்றனர்.

இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழகத்தில் நிலவி வரும் பணப்பற்றாக்குறை காரணமாக வியாபாரிகளும் அதிகளவில் வராததால் போதிய விலையும் கிடைக்காததால்

கரும்பை வெட்டலாமா அல்லது சர்க்கரை ஆலைகளுக்கு வெட்டி விடலாமா என்று கவலையுடன் பல விவசாயிகள் இருக்கின்றனர். கடந்த ஆண்டு கரும்பு கட்டு ஒன்று ரூ.300 வரை விற்றதாகவும், தற்போது ரூ.210க்கு மட்டுமே விற்று வருவதாக கவலையுடன் கூறினர்.

**செவ்வந்தி பூக்களின் விளைச்சலோ அதிகம்; விலையோ குறைவு**

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டி பகுதியில் செவந்தி பூக்களின் விளைச்சல் அதிகமாக உள்ளது. ஆனால் விலையோ மிகவும் குறைவாக உள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஆண்டிபட்டியை சுற்றியுள்ள இராஜதானி, மஞ்சிநாயக்கன்பட்டி, திம்மரசநாயக்கனூர், பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், பாலகோம்பை, ஜக்கம்மாள்பட்டி உள்ளிட்ட கிராம பகுதிகளில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பூ விவசாயிகள் மல்லிகை, கனகாம்பரம், செவந்தி, ரோஜா, மரிகொழுந்து, சென்டு பூ உள்ளிட்ட பூக்கள் வகைகளை விவசாயம் செய்து வருகிறார்கள்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்பு கால்வாய், போர்வெல், கிணற்று பாசன மூலம் விவசாயம் செய்து வந்தனர். ஆனால் கடந்த 7 வருடங்களாக இப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. மேலும் பருவமழைகளும் பொய்துவிட்டது. இதனால் ஆறு, குளம், கண்மாய், ஆழ்துளை கிணறு உள்ளிட்டவைகளில் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.

பருவ மழையை நம்பி மானாவரி நிலங்களில் விதைக்கப்பட்ட பயிர்கள் அனைத்தும் கருகிய நிலையில் உள்ளன. இதனால் பல ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தற்போது பனி காலம் என்பதால் செவ்வந்தி பூக்களின் விளைச்சல் அதிகரித்துள்ளது. இப்பகுதியில் விளையும் பூக்களை தேனி, ஆண்டிபட்டி, மதுரை

மாட்டுத்தாவணி உள்ளிட்ட பூ மார்கெட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர்.தற்போது செவ்வந்தி ஒரு கிலோ ரூ.10க்கு விற்பனையாகிறது. ஆனால் இந்த பூவை உற்பத்தி செய்வதற்கான தண்ணீர் கிணற்றில் இல்லாததால் தண்ணீர் விலைக்கு வாங்கி பூச்செடிகளுக்கு விவசாயிகள் பாய்ச்சுகின்றனர். அரசு வறட்சியால் வாடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மாவட்டத்தில் 750 ஹெக்டர் நிலம் வறட்சியால் பாதிப்பு**

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில் 750 ஹெக்டர் நிலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்த நிலையில் நீலகிரி மாவட்டத்திலும் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான பகுதிகளில் மலை காய்கறிகள் பயிரிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் மழையின்றி சேதமடைந்துள்ளன.

இந்நிலையில், வறட்சி பாதித்த பகுதிகளை தமிழக சமூக நலத்துறை அமைச்சர் சரோஜா தலைமையிலான குழுவினர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் முடிவில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்த எவ்வித தகவலும் வெளியாகவில்லை. எனினும், நீலகிரி மாவட்டத்தில் வறட்சியால், 750 ஹெக்டர் மலை காய்கறி தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முதற்கட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், தொடர்ந்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் மற்றும் இதர துறைகள் ஆய்வுகள் மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. எனவே, இது அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதே சமயம், இந்த 750 ஹெக்டர் பரப்பளவில் தேயிலை தோட்டங்கள் இடம் பெறவில்லை எனக் கூறப்படுகிறது.

தமிழகம் வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்கப்படும் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவிகள் நிலவரி முழுவதுமாக தள்ளுபடி; பயிர் சேதத்துக்கு ஏற்ப இழப்பீடு



சென்னை,

முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

**<u>மக்களைக் காக்கும் நடவடிக்கை</u>**

வெள்ளம், புயல், வறட்சி ஆகிய இயற்கை இன்னல்கள் ஏற்படும்போது அவற்றை தடுப்பதில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும், அவற்றால் ஏற்படும் பாதிப்புகளை தணிப்பதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2012-13-ம் ஆண்டு தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டபோது, இந்தியாவிற்கே முன்னுதாரணமாக விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கி வரலாறு படைத்தவர் மறைந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா. தற்போது தமிழ்நாடு அரசு தமிழகத்தில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து மக்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**குழுக்கள் அமைப்பு**

தமிழ்நாட்டில் வறட்சி சூழ்நிலை உருவாகியிருந்த நிலையில் அதுபற்றி அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்த பிறகு, பயிர் பாதிப்பு நிலைமைகளை நேரில் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை வழங்குவதற்காக அமைச்சர்கள் மற்றும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொண்ட குழுக்களை உடனடியாக அமைக்க நான் உத்தரவிட்டிருந்தேன்.

இதுபற்றி அறிக்கை ஒன்றையும் 3-ந் தேதியன்று நான் வெளியிட்டிருந்தேன். அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தபடி, அமைச்சர்கள் மற்றும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கொண்ட குழுக்கள் 3-ந் தேதியன்றே அமைக்கப்பட்டன.

**ஆலோசனை கூட்டம்**

இந்த குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொண்டு தங்களது அறிக்கையை அரசுக்கு 9-ந் தேதியன்று (நேற்று முன்தினம்) அளித்தனர். இந்த குழுக்கள் அளித்த அறிக்கைகளின் பேரில் விரிவான ஆலோசனை கூட்டம் 9-ந் தேதியன்று நடத்தப்பட்டது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர்கள் திண்டுக் கல் சி.சீனிவாசன், எடப்பாடி கே.பழனிச்சாமி, எஸ்.பி.வேலுமணி, ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.சண்முகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் க.பனீந்திர ரெட்டி, வருவாய்த்துறை செயலாளர் பி.சந்திரமோகன், வேளாண்மைத் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, வருவாய் நிர்வாக ஆணையர் கோ.சத்யகோபால், வேளாண்மைத்துறை இயக்குனர் வ.தட்சிணாமூர்த்தி மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**அனைத்து மாவட்டங்களும்...**

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வடகிழக்கு பருவமழை மிகக்குறைவாக பெய்துள்ளதால், அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்தவேண்டிய நிலவரி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்பச் செலுத்த இயலாது. எனவே, கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் ஆகியவற்றில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்க வழிவகை செய்யப்படும். இவ்வாறு மாற்றியமைப்பதற்கு தேவையான அன்னவாரி சான்றிதழ்கள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**மத்திய காலக்கடன்**

கூட்டுறவு வங்கிகள் மூலம் 3 ஆயிரத்து 28 கோடி ரூபாய் பயிர்க்கடனாக இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த கடன் மத்திய காலக்கடனாக மாற்றியமைக்கப்படும்.

தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்த வறட்சியிலிருந்து மக்களைப் பாதுகாக்க பெரும் பொருட்செலவு ஏற்படும். எனவே, மத்திய அரசின் நிதியுதவி கோரப்படும். அதற்கான வறட்சி நிவாரண கோரிக்கை மனு தயார் செய்யப்பட்டு, விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

**நிவாரண உதவித்தொகை**

பேரிடர் நிவாரண வரையறையின்படி பயிர் சேதங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை உயர்த்தப்பட்டு 27.10.2015 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின்படி 33 சதவீதத்திற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு, நிவாரண உதவித்தொகை வழங்கப்படும்.

நெல் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரத்து 465 ரூபாய்; நெல் தவிர, இதர நீர்ப் பாய்ச்சப்பட்ட பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரத்து 465 ரூபாய்; மானாவாரி பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய்; நீண்ட கால பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7 ஆயிரத்து 287 ரூபாய்; முசுக்கட்டை பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத்தொகை வழங்கப்படும்.

**<u>அரசுக்கு செலவு அதிகம்</u>**

பயிர்க்காப்பீடு செய்த விவசாயிகள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பயிர் இழப்புக் கான இழப்பீட்டுத் தொகையை பெற இயலும். அதற்கான பயிர் அறுவடை பரிசோதனை விரைந்து மேற்கொள்ளப்படும்.

பேரிடர் நிவாரண வரையறைப்படி, நிவாரணம் மட்டுமே பெற இயலும் என்பதால், பயிர்க் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் பயிர்க்காப்பீடு செய்ய தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அதிக பயன் கிடைக்கும் என்பதால், அரசுக்கு செலவு அதிகம் என்றாலும், இந்த திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

**<u>பிரிமீயம் தொகை ரூ.40 கோடி</u>**

கடந்த ஆண்டுகளில் சராசரியாக பயிர்க் காப்பீட்டிற்கு அரசின் பங்களிப்பு பிரிமீயம் தொகையாக 40 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு மாநில அரசின் பங்காக 410 கோடி ரூபாய் செலுத்தப்படுகிறது.

நெல் சாகுபடி செய்த விவசாயிகள், முழு பயிரிழப்பு அதாவது 100 சதவீத பயிரிழப்பு ஏற்பட்டிருந்தால் மாவட்டத்தைப் பொறுத்து, ஏக்கர் ஒன்றுக்கு 21 ஆயிரத்து 500 முதல் 26 ஆயிரம் ரூபாய் வரை காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து இழப்பீடு பெற இயலும்.

**<u>டெல்டா மாவட்டம்</u>**

டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரை, இழப்பீட்டுத் தொகை 25 ஆயிரம் ரூபாய் ஆகும். டெல்டா மாவட்டங்களில் 80 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டிருந்தால், ஏக்கர் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய்; 60 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டிருந்தால், ஏக்கர்

ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய்; 33 சதவீத மகசூல் இழப்பு ஏற்பட்டிருந்தால் ஏக்கர் ஒன்றுக்கு 8 ஆயிரத்து 250 ரூபாய் பெற இயலும்.

இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை 33 சதவீதத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகள் மகசூல் இழப்பிற்கு ஏற்றபடி இழப்பீடு பெற இயலும். இதே போன்று, மற்ற பயிர்கள் பயிரிட்டு பயிரிழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளும், அந்தந்த மாவட்டங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள தொகையை இழப்பீடாக பெற இயலும்.

**பணி வரம்பு நாள் உயர்வு**

சோளப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் வரையிலும், பயறு வகைகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் வரையிலும், கரும்புக்கு ஏக்கர் ஒன்றுக்கு 45 ஆயிரம் ரூபாய் வரையிலும், மஞ்சள் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரையிலும் பயிரிழப்புக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகை பெற இயலும்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்படும்.

**கால்நடை தீவனம் வழங்கப்படும்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் ஏரிகள் தூர் வாருதல், குளங்கள் சீரமைத்தல் மற்றும் பாசன வாய்க்கால்கள் தூர்வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த பணிகள் 3,400 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறுவர்.

வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை வாயிலாக பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென 78 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

## குடிநீர் பற்றாக்குறை

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் வினியோகத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் வினியோகத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## நீராதார மேம்பாடு

வறட்சி காரணமாக வன உயிரினங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அவற்றுக்கு தேவையான தீவனம் மற்றும் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். பொதுப்பணித்துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செரிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்கள் மேம்படுத்தும் பணிகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## விவசாயிகள் தற்கொலை நிவாரணம்

கடந்த இரண்டு மாதங்களில் 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விவசாயிகளின் இந்த தற்கொலைகள் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டிருந்தாலும், இறந்தவர்களின் குடும்ப நலன் கருதி அவர்களின் குடும்பங்களுக்கு முதல்- அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

வறட்சி பாதிப்பு காரணமாக அதிர்ச்சியில் விவசாயிகள் உயிரிழந்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. இது பற்றி விரிவான அறிக்கை மாவட்ட கலெக்டர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்றபின், இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தக்க நிவாரண உதவி வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகை 'களை' கட்டியது: கரும்பு, மஞ்சள்குலை விற்பனை மும்முரம்



நாகர்கோவில்,

குமரி மாவட்டத்தில் பொங்கல் பண்டிகை 'களை' கட்ட தொடங்கி விட்டது. கரும்பு, மஞ்சள்குலை உள்ளிட்ட பொங்கல் பொருட்களின் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

பொங்கல் பண்டிகை

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் தை மாதம் 1-ந் தேதி கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான பொங்கல் பண்டிகை வருகிற 14-ந் தேதி கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் பண்டிகை அறுவடை திருநாளாகவும், உழவர் திருநாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பருவமழை பொய்த்துப்போனதால் ஏற்பட்ட வறட்சியால் விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தாலும், தமிழகத்தில் பாரம்பரியமாக கொண்டாடப்படும் இந்த பண்டிகை சிறப்பாக கொண்டாட பொதுமக்களும், விவசாயிகளும் தயாராகி வருகிறார்கள். சாதி, மத, இன பாகுபாடு இன்றி கொண்டாடப்படும் இந்த பொங்கல் பண்டிகையன்று விவசாயிகளும், பொதுமக்களும் அதிகாலையிலேயே எழுந்து நீராடி, புத்தாடை அணிந்து, வீட்டின் முற்றங்களில் வண்ண, வண்ண கோலமிட்டும், பின்னர் குடும்பமாய் சேர்ந்து பொங்கலோ பொங்கல் என்ற குலவை சத்தத்துடன் பொங்கலிட்டு தாங்கள் வணங்கும் தெய்வங்களுக்கு படைத்தும் பொங்கல் பண்டிகையை கொண்டாடுவது வழக்கம். அதன்பிறகு வீடுகளில் அறுசுவை உணவுகள் தயாரித்து பரிமாறப்படும்.

மும்முரமாக விற்பனை

எனவே பொங்கல் பண்டிகை என்றாலே புத்தரிசி பொங்கல், தித்திக்கும் கரும்பு, பழ வகைகள், மஞ்சள் குலைகள், பனங்கிழங்கு உள்ளிட்ட பல்வேறு கிழங்கு வகைகள், காய்கறிகள், மண்பானைகள், பனை ஓலைகள் போன்றவை முக்கிய இடம் பெறும். எனவே பொங்கல் பண்டிகைக்கு தேவையான பொருட்களே ஒரு சில நாட்களுக்கு முன்பிருந்தே மக்கள் வாங்கி வைக்கத் தொடங்கி விடுவார்கள்.

இதேபோல் பொங்கலுக்கு இன்னும் 2 தினங்களே உள்ள நிலையில் தற்போது பொங்கல் பொருட்கள் விற்பனை சூடுபிடிக்கத் தொடங்கிஉள்ளது. நாகர்கோவில் வடசேரி சந்தை, ஒழுகினசேரி பகுதியில் உள்ள தனியார் சந்தை மற்றும் நகரப்பகுதியில் உள்ள பெரிய, பெரிய காய்கறி கடைகள், நடைபாதைக் கடைகள் போன்றவற்றில் கரும்பு, மஞ்சள்குலை, பனங்கிழங்கு, பனை ஓலை கட்டுகள், பொங்கல் கிழங்கு வகைகள், பொங்கல் பானைகள் உள்ளிட்ட பொருட்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் போட்டி, போட்டு வாங்கிச் செல்வதால் இவற்றின் விற்பனையும் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

ரூ.320-க்கு கரும்பு கட்டுகள்

நாகர்கோவில் வடசேரி பகுதியில் நடைபாதைகளில் விற்பனை செய்யப்படும் கரும்பு ஒன்று ரூ.40-க்கும், 25 கரும்புகள் கொண்ட கட்டு ஒன்று ரூ.400-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

25 பனங்கிழங்குகள் கொண்ட ஒரு கட்டு ரூ.70-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேநேரத்தில் சந்தைகளில் கரும்பு ஒன்று ரூ.30-க்கும், கட்டு ஒன்று ரூ.320-க்கும் விற்பனை செய்யப்பட்டது. பனங்கிழக்கு ஒன்று ரூ.2 என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டது.

இதேபோல் பொங்கல் பொருட்களான மஞ்சள்குலை ஒன்று ரூ.25-க்கும், ஒரு கிலோ கருணைக்கிழங்கு ரூ.40, குச்சி சேம்புக்கிழங்கு ரூ.40, பிடிகிழங்கு- ரூ.40, சிறுகிழங்கு- ரூ.56, சீனிகிழங்கு- ரூ.30, பால்சேம்புக்கிழங்கு- ரூ.50, கூவைக்கிழங்கு- ரூ.50, காச்சிக்கிழங்கு- ரூ.46, மிக்சர் கிழங்கு- ரூ.50 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது.

பொங்கல் வைக்க பயன்படுத்தும் மண்பானைகள், பொங்கல் வைக்க அடுப்பு எரிக்க பயன்படுத்தும் பனை ஓலை கட்டுகள், கோலப்பொடிகள் விற்பனை போன்றவையும்

விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதேபோல் மாவட்டம் முழுவதும் பரவலாக பொங்கல் பொருட்களின் விற்பனை தீவிரமடைந்து வருகிறது.

**மஞ்சளாற்றில் கடல்நீர் புகுந்ததால் சம்பா நெற்பயிர்கள் கருகின**



மன்னம்பந்தல்,

மஞ்சளாற்றில் கடல்நீர் புகுந்ததால் சம்பா நெற்பயிர்கள் கருகி உள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மஞ்சளாற்றில் புகுந்த கடல்நீர்

கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாததால் சம்பா சாகுபடி செய்வதற்கு தமிழக அரசு காலம் தாழ்த்தி தண்ணீர் திறந்துவிடுகிறது. இதேபோல் கடந்த 2016-ம் ஆண்டும் சம்பா சாகுபடிக்கு தமிழக அரசு காலம் தாழ்த்தி தண்ணீர் திறந்துவிட்டது. ஆனால், இந்த காவிரிநீர் கடைமடை பகுதிகளுக்கு வந்து சேரவில்லை. இதனால் விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீர் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் மஞ்சளாற்றில் செல்லும் தண்ணீரை பயன்படுத்தி கடலோர கிராமங்களான நாகை மாவட்டம், செம்பனார்கோவில் அருகே ஆக்கூர், மாமாகுடி, தோட்டம், திருக்கடையூர், பிச்சக்கட்டளை, அன்னப்பன்பேட்டை, பிள்ளைபெருமாள்நல்லூர் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் சம்பா சாகுபடி செய்து இருந்தனர். இந்தநிலையில் தற்போது மஞ்சளாற்றில் கடல்நீர் உட்புகுந்துள்ளதால் வயல்கள் உப்பு தன்மை கொண்டதாக மாறி சம்பா நெற்பயிர்கள் கருகின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தடுப்பணை

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், மஞ்சலாற்றில் செல்லும் தண்ணீரை பயன்படுத்தி சம்பா சாகுபடி செய்தோம். வடகிழக்கு பருவமழை பொய்த்துபோனதாலும், மேட்டூர் அணையில் இருந்து காவிரிநீர் திறந்துவிடப்படாததாலும் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இந்தநிலையில் தற்போது மஞ்சளாற்றில் கடல்நீர் புகுந்துள்ளதால் சம்பா நெற்பயிர்கள் கருகி உள்ளன. இதனால் மிகவும் வேதனையாக உள்ளோம். மேலும், இந்த பகுதியில் நிலத்தடிநீரும் உப்பு தன்மை கொண்டதாக மாறி உள்ளது. எனவே, கடல்நீர் உட்புகுவதை தடுக்க மேற்கண்ட பகுதியில் மஞ்சலாற்றில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**நாமகிரிபேட்டையில் ரூ.6 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்**



ராசிபுரம்,

நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை சங்கம் கிளை வளாகத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். சேலம், ஈரோடு,

நாமகிரிபேட்டை உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை ஏலம் எடுத்தனர்.

இந்த ஏலத்தில் விரலி ரகம் 72 மூட்டைகளும், உருண்டை ரகம் 30 மூட்டைகளும், பனங்காலி ரகம் 3 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.8,449–க்கும், அதிகபட்சமாக ரூ.9,415–க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.7,215–க்கும், அதிகப்பட்சமாக ரூ.8,549–க்கும், பனங்காலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.16,259–க்கும், அதிகபட்சமாக ரூ.18,815–க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் 105 மஞ்சள் மூட்டைகள் ரூ.6 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**பயிர்க்கடன்கள் தள்ளுபடி: ராமதாஸ் வலியுறுத்தல்**

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அனைத்து மாவட்டங்களும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கப்படும் என்று முதல்வர் அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கது. நிலவரி என்பது மிகக் குறைந்த தொகை. பயிர்க்கடன் தள்ளுபடிதான் விவசாயிகளின் முக்கியக் கோரிக்கை. கூட்டுறவு, பொதுத்துறை வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய அனைத்து வகை பயிர்க்கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

நிபந்தனையின்றி, பாதிக்கப் பட்ட பயிர்களில் நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், நீண்டகால பணப் பயிர்களுக்கு சந்தை மதிப்புக்கு ஏற்ப ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை இழப்பீடு வழங்க வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்படி வேலை வழங்கும் நாட்கள் எண்ணிக்கை 150 ஆக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற் கத்தக்கது. அனைத்து குடும்பங் களுக்கும் முழு

அளவில் வேலை வாய்ப்பு வழங்குவதை அரசு உறுதி செய்ய வேண்டும். உயிரிழந்த 190 விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**வறட்சியால் பறிக்கப்பட்ட வாழ்வாதாரம்: சாகுபடியை இழந்து தவிக்கும் திருவாரூர் விவசாயிகள்**



திருவாரூர் மாவட்டம் எளவனூர் கோட்டத்தில் தண்ணீரின்றி பயிர்கள் கருகிய வயல்களில் மேய விடப்பட்டுள்ள கால்நடைகள்.

2003-ம் ஆண்டு ஜனவரி 7-ம் தேதி டெல்டா விவசாயிகளின் வாழ்க்கை அவல நிலை குறித்து தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்திய நாள். டெல்டா மாவட்டமெங்கும் விவசாயிகள் பெரும் போராட்டத்தில் குதித்த நாள். அந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களில் வறட்சி வாட்டி யெடுத்தது. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள பாளையக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சண்முகம், தற்கொலை செய்து கொண்டார்.

ஆனால் அவர் உயிரை துறக்கும் முன், அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு தனது தற்கொலைக்கான காரணம் குறித்து நீண்ட கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு, உயிரை விட்டார். வறட்சியும், வறுமையும், அதனால் சேர்ந்த கடனும் ஏற்படுத்திய நெருக்

கடி பற்றி கடிதத்தில் விவரித்திருந்த சண்முகம், அப்போதைய மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் வை.சிவபுண்ணியம் மூலம் தமிழக முதல்வரிடம் இந்த கடிதம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற குறிப்பையும் அதில் எழுதியிருந் தார். அன்றைக்கு மக்கள் மன்றத்திலும், தமிழக சட்டப் பேரவையிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய கடிதம் அது.

இன்று மீண்டும் வறட்சி. ஆனால் 2003-ம் ஆண்டு கண்ட வறட்சி அல்ல; அதை விடவும் மோசமான வறட்சி. 100 ஆண்டுகளில் இல்லாத வறட்சி என்கிறார்கள். சண்முகம் உயிர் துறந்த அதே பாளையக்கோட்டை கிராமத்தில் இந்த ஆண்டு மீண்டும் ஒரு உயிரை காவு வாங்கியிருக்கிறது இந்த ஆண்டின் வறட்சி.

பாளையக்கோட்டை புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அசோகன். இந்த ஆண்டு 6 ஏக்கர் நிலத்தில் நேரடி விதைப்பு மூலம் நெல் சாகுபடி செய்தார். எதிர்பார்த்தபடி ஆற்றில் தண்ணீர் வரவில்லை. பருவமழையும் பொய்த்தது. பயிரை இனி காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையை அசோகன் இழந்து விட்டார். இந்நிலையில், திடீரென பெய்த ஒரு சிறுமழையால் பயிருக்கு கொஞ்சம் தண்ணீர் கிடைத்தது. இந்த தண்ணீர் போதாது. ஆனாலும், வயலுக்கு உரம் கொடுத்து பயிரை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்று அசோகனின் மனம் பதைபதைத்தது.

கையில் பணம் இல்லை. மத்திய அரசின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் கடன் கொடுக்கக் கூடிய நிலையில் ஊரில் யாரும் இல்லை. வீட்டில் இருந்த சொற்ப அளவு தங்க நகையை எடுத்துக் கொண்டு உள்ளூரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு ஓடினார் அசோகன்.

உயிரிழந்த விவசாயி அசோகனின் படத்துக்கு அருகே சோகத்துடன் அமர்ந்திருக்கும் அவரது குடும்பத்தினர்.

அதன் பிறகு என்ன நடந்தது என்பதை அவரது மூத்த மகன் கலைவாணன் விவரிக்கிறார். "அது டிசம்பர் மாதம் 1-ம் தேதி. அப்பா நகையை எடுத்துச் சென்று இங்குள்ள ஐ.ஓ.பி. வங்கியில் ரூ.14 ஆயிரத்துக்கு அடகு வைத்தார். அந்த பணத்தை கொண்டு வயலுக்கு உரம் வாங்கி வந்து விடலாம் என்ற எண்ணத்தில் நீண்ட நேரம் வங்கியில் வரிசையில் நின்றிருக்கிறார். மாலை வரை பணம் கிடைக்கவில்லை. நகையை அடகு வைத்ததற்கான ரசீது மட்டும் கொடுத்த வங்கி அதிகாரிகள், வங்கியில் பணம் இல்லை என்றும், மறுநாள் வந்து பணத்தை வாங்கிக் கொள்ளுமாறும் கூறி விட்டனர்.

ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய அப்பா, இரவு முழுவதும் தூங்காமல் மறுநாளாவது பணம் கிடைத்து விடுமா என்பது பற்றியும், வயலில் ஈரம் காய்வதற்குள் உரம் போட்டுவிட முடியுமா என்பது பற்றியும் கவலையுடன் பேசிக் கொண்டிருந்தார். மறுநாள் காலை சாப்பிட கூட இல்லாமல் 8 மணிக்கெல்லாம் வங்கியின் முன்னே வரிசையில் போய் நின்றார். நீண்ட நேரம் வரிசையிலேயே காத்திருந்தார். சுமார் 10.30 மணி அளவில், நெஞ்சு வலி ஏற்பட்டு மயக்கமடைந்த அவர் அதே இடத்தில் சரிந்து கீழே விழுந்திருக்கிறார். அந்த இடத்தில் இருந்தவர்கள் உடனடியாக அவரை காரில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக டாக்டர்கள் கூறி விட்டனர். அப்பா சாகுபடி செய்த பயிர்கள் முழுவதும் கருகி, சாகுபடியே அழிந்து விட்டது. பயிர்கள் மட்டும் சாகவில்லை. பயிர்கள் சாகும் முன்னே எங்கள் அப்பாவும் செத்து விட்டார்" என்று கண்ணீருடன் கூறினார் கலைவாணன்.

வறட்சியின் கோரம் 56 வயதில் அசோகனின் உயிரை பறித்து சென்று விட்டது. மூத்த மகன் விவசாயத்தை கவனிக்கிறார். இளைய மகனும், மகளும் கல்லூரியில் படித்து வருகின்றனர். யாருக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை. அடுத்து என்ன செய்வது என எதுவும் புரியாமல் தவித்து வருகிறார் அசோகனின் மனைவி வேதவல்லி.

**வங்கிக்கு கோரிக்கை**

இந்த சம்பவம் பற்றி மேலும் பல தகவல்களை தெரிவித்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கோட்டூர் ஒன்றிய செயலாளர் பி.பரந்தாமன், “அசோகன் எந்த நோக்கத்துக்காக நகையை அடகு வைத்தாரோ அதற்கு பணம் கிடைக்க வில்லை. இன்று வரை அந்த குடும்பத்துக்கு பணம் கிடைக்காததோடு, நகையும் இப்போது வங்கியில் உள்ளது. இனி இறப்புச் சான்று, வாரிசுச் சான்று என பல சம்பிரதாயங்கள் முடிந்து தான் வங்கியில் இருந்து நகையை பெற முடியும்.

இதற்கிடையே பி.இ. இரண்டாம் ஆண்டு பயிலும் அசோகனின் இளைய மகன் பிரவீனுக்கு கல்விக் கட்டணத்தை செலுத்த முடியவில்லை. கல்விக் கடன் பெறுவதற்கு உரிய தகுதி இருந்தும், உள்ளூரில் இருக்கும் அதே வங்கியிடம் கல்விக்கடன் கேட்டு எவ்வளவோ மன்றாடியும் கூட கடன் வழங்க மறுத்து விட்டார்கள். தங்கள் வங்கியின் வாசலில் கீழே விழுந்து உயிரை துறந்த ஏழை விவசாயியின் மகன் என்ற மனிதாபி மான அடிப்படையில், இப்போதாவது அசோக னின் மகனுக்கு கல்விக் கடன் வழங்க அந்த வங்கி நிர்வாகம் முன்வர வேண்டும்” என்றார்.

அசோகனின் மரணம் ஒரு உதாரணம் மட்டுமே. திருவாரூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் இதுபோல தினமும் பல மரண செய்திகள் வந்து கொண்டே இருக் கின்றன. இந்த மாவட்டத்தில் உள்ள கோட்டூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, திருவாரூர் பகுதிகள் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளன. நன்னிலம், குடவாசல், கொரடாச்சேரி, நீடாமங்கலம், வலங்கைமான், மன்னார்குடி உள்ளிட்ட மாவட்டத்தின் இதரப் பகுதிகளிலும் வறட்சி பெருமளவில் பாதித்துள்ளது.

முத்துப்பேட்டை ஒன்றியம் குன்னலூர் ஊராட்சி தர்க்காஸ் கிராமத்துக்கு சென்றபோது, கண்ணுக்கெட்டிய தூரம் பரந்து விரிந்திருந்த வயல்வெளியில் எங்கும் பச்சை நிறம் தெரிந்தது. தூரத்தில் இருந்து பார்க்கும்போது நெற்பயிர்கள் செழித்து வளர்ந்திருப்பது

போல இருந்தது. ஆனால் அந்த வயல்களில் கூட்டம் கூட்டமாக கால்நடைகள் மேய்ந்து கொண்டிருந்தன.



முத்துப்பேட்டை ஒன்றியம் குன்னலூர் ஊராட்சி தர்க்காஸ் கிராமத்தில் வயல்களில் மண்டிக் கிடக்கும் புல், களைகளைக் காட்டும் விவசாயிகள்.

இதுகுறித்து அக்கிராமத்தைச் சேர்ந்த எஸ். இளங்கோவனிடம் கேட்டபோது, “பருவ மழை காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் நேரடி விதைப்பில் நெல் விதைகளை தெளித்தோம். விதைத்த நெல் முளைத்து, பயிரும் நன்றாகத்தான் இருந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி மழை பெய்யவில்லை.

**பிள்ளைகளைப் போல வளர்த்தோம்..**

எங்கள் பகுதியில் நிலத்தடி நீரில் உப்புத் தன்மை அதிகரித்து விட்டது. அந்த நீரை வயலுக்கு இறைத்தால், பயிர்கள் கருகி விடும். ஆகவே, ஆற்று நீர் அல்லது மழை நீர்தான் எங்களுக்கான பாசன ஆதாரம். இந்த சூழலில் ஆற்று நீரும் வராமல், பருவமழையும் பொய்த்ததால், நிலம் வறண்டுபோய் எங்கள் கண்ணெதிரே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிர்கள் கருகி அழிந்து விட்டன.

அப்போதெல்லாம் பெய்யாத மழை கடந்த வாரம் திடீரென இரண்டு நாட்கள் கொட்டித் தீர்த்தது. ஏற்கெனவே பயிர்கள் அழிந்து விட்டதால் இந்த மழையால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. இந்த மழையால் வயல்களில் புல்லும், களையும் நன்கு செழித்து வளர்ந்து இப்போது பச்சைப் பசேலென உள்ளது. இந்த புல்தான் தூரத்தில் இருந்து பார்க்கும்போது நெற்பயிர்களைப் போல தெரிகிறது" என்றார்.

அந்த கிராமத்தைச் சேர்ந்த சில பெண்கள், "பிள்ளைகளைப் போல வளர்த்த நெற்பயிர் கண்ணுக்கெதிரே அழியும்போது அதை தாங்கிக் கொள்ள மனதில் பெரும் தெம்பு வேண்டும். அழிந்து போன வயல்களைப் பார்த்து குடும்பம் குடும்பமாக கூடி அழுகிறோம். அழுது புலம்பி எங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறோம். இந்த அளவுக்கு கூட மனத்திடம் இல்லாத பலர் அதிர்ச்சி யாலும், தற்கொலை செய்து கொண்டும் உயிரை விடுகின்றனர். இந்த நிலைமை இன்னும் எங்கு கொண்டு போய் விடும் என தெரியவில்லை" என்று தங்கள் கவலையை வெளிப்படுத்தினர்.

**சாகுபடியே இல்லாத ஆண்டு**

"எனக்கு 80 வயதாகிறது. என் வாழ்நாளில் இதுபோன்ற ஒரு வறட்சியை பார்த்ததும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை" என்கிறார் காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ்.ரங்கநாதன்.

"ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டால் டெல்டாவில் குறுவையும், தாளடியும் சாகுபடி நடக்கும். ஒருவேளை அணையில் போதிய நீர் இருப்பு இல்லாமல் தாமதமாகத் திறக்கப்பட்டால் சம்பா நெல் சாகுபடி நடைபெறும். ஆனால் ஒரு பருவம் கூட நெல் சாகுபடி இல்லாத ஒரு ஆண்டை என் வாழ்நாளில் இப்போதுதான் முதல் முறையாக சந்திக்கிறேன். நிலத்தடி நீரை நம்பி சாகுபடி செய்யப்பட்ட வயல்களில் சாகுபடி செலவை ஈடுகட்டும் அளவுக்கு கூட மகசூல் இல்லை.

இதனால் மனமுடையும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதும், ‘அய்யோ எல்லாம் போச்சே’ என்ற அதிர்ச்சியில் உயிரைத் துறப்பதும், எங்களை மேலும் மேலும் துக்கத்தில் ஆழ்த்துகிறது.

**உச்ச நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துங்கள்..**

நம்பிக்கை இழந்து நிற்கும் விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் அரசு போர்க்கால நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். விவசாயிகளின் மரணங்களை அலட்சி யப்படுத்தாமல், முறைப்படி பதிவு செய்து, உச்ச நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். உச்ச நீதிமன்றத்துக்கு உண்மை நிலைமையை தெரியப்படுத்தினால்தான் எதிர்காலத்திலாவது காவிரியில் உரிய நீர் பெற்று நமது சாகுபடியை உறுதி செய்ய முடியும்” என்றார் ரங்கநாதன்.

மன்னார்குடி சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் வை.சிவபுண்ணியம் கூறும்போது, “நாட்டுக்கே உணவு படைத்த பெருமை மிக்க மண் இது. ஆனால் இன்று அதே மண்ணில் கவுரத்துடன் வாழ வழியில்லை என்ற மோசமான நிலைமையை தற்போதைய வறட்சி ஏற்படுத்தி விட்டது. இதனால் நம்பிக்கை இழந்த விவசாயிகள் தினமும் தற்கொலை செய்து கொள்கின்றனர். ஒரு காலத்தில் ஆற்று நீர் வராவிட்டால் கூட, மழை நீரையும், நிலத்தடி நீரையும் நம்பி சாகுபடி செய்து விட முடியும் என்ற நம்பிக்கை திருவாரூர் மாவட்ட விவசாயிகளிடம் இருந்தது. ஆனால் இன்று மாவட்டத்தின் பெரும்பகுதியில் நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகரித்து விட்டதால், அந்த நீரை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்த மாவட்டத்தில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லை என்ற நிலைமை விரைவிலேயே வரப் போகிறது. ஆகவே, மத்திய, மாநில அரசுகள் உட னடியாக தனி கவனம் செலுத்தி டெல்டா மக்க ளைக் காப்பாற்ற முன்வர வேண்டும்” என்றார்.

**தொலைநோக்கு திட்டம் அவசியம்**

“டெல்டா மாவட்டங்களை பெரும் அழிவி லிருந்து காப்பாற்ற வேண்டுமானால், தொலை நோக்கு பார்வையிலான திட்டமிடல் அவசியம்” என்கிறார் அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் பி.ஆர்.பாண்டியன்.

“பாசனம் இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் வேண்டும். அது மட்டுமின்றி, மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரி, குளம், ஆறு, கால்வாய்களையும் தூர்வாரி நிலத்தடி நீரை மேம்படுத்துவதற்கான தனிப்பெரும் திட்டம், மிகப்பெரிய நிதி ஒதுக்கீட்டுடன் உருவாக்கப்பட வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவ செல்வந்தர்களும், பெரும் தொழில் நிறுவனங்களும், சேவை அமைப்புகளும் முன்வர வேண்டும்.

எந்தவொரு விவசாயியும் தனது மனைவி யையும், குழந்தைகளையும் தவிக்க விட்டுவிட்டு தற்கொலை செய்து கொள்ள துணிய மாட்டான். ஆனாலும் டெல்டாவில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மரணமடைந்துள்ளனர் என்றால் இங்குள்ள நிலைமையின் தீவிரத்தை மத்திய, மாநில அரசுகள் உணர வேண்டும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் போதிய நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்” என்று வலியுறுத்துகிறார் பாண்டியன்.

இதற்கிடையே உயிரிழந்த விவசாயிகளின் மரணத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் சில அமைச்சர்கள் பேசியுள்ளது விவசாயிகளிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி கருத்து தெரிவித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் ஐ.வி.நாகராஜன், “வறட்சியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த விவசாயிகளின் மரணத்தை கொச்சைப்படுத்திய அமைச்சர்களை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கண்டிக்க வேண்டும். உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்” என்றார்.

ஓரிரு நாளில் வரவுள்ள உழவர் திருநாளாம் பொங்கல் திருநாளை வரவேற்க எவ்வித தயாரிப்பும் இன்றி, வாழ்வாதாரத்தையே இழந்த துக்கமான மன நிலையில் டெல்டா விவசாயிகள் உள்ளனர். ஊருக்கெல்லாம் உணவு தந்த அந்த உழவர்களுக்கு ஆறுதல் தரும் விதத்தில் அரசு தற்போது எடுக்கும் நடவடிக்கைகள், இனி வரும் காலத்தில் உழவுத் தொழிலில் நம்மால் நீடித்திருக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்களிடம் ஏற்படுத்துவதாக அமைய வேண்டும்.

தினமணி

**குறைந்தபட்ச அளவை எட்டியது மேட்டூர் அணை நீர்மட்டம்: குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் கிடைக்குமா?**



நீர்மட்டம் சரிந்ததால் குட்டைபோல காட்சியளிக்கும் மேட்டூர் அணை.

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்தபட்ச அளவை எட்டியுள்ளது. இதனால் தொடர்ந்து குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் கிடைப்பது கேள்விக்குறியாகியுள்ளது.

காவிரி நடுவர் மன்ற உத்தரவுப்படி தமிழகத்துக்கு உரிய காவிரி நீரை கர்நாடகம் வழங்க மறுத்து வருகிறது. தென்மேற்குப் பருவ மழையால் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் நிலை மாறி, பருவ மழையும் பொய்த்துப் போனது. வடகிழக்குப் பருவ மழையாவது கைகொடுக்கும் என எதிர்பார்த்த நிலையில், வழக்கத்தைவிட குறைவாகப் பெய்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெகுவாக சரிந்தது. செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 32 கன அடியாகச் சரிந்தது. அணையிலிருந்து நொடிக்கு 750 கன அடி வீதம் குடிநீர்த் தேவைக்காக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர்வரத்தைவிட திறப்பு அதிகமாக இருப்பதால், செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 35.69 அடியாகச் சரிந்தது. அணையின் நீர் இருப்பு 9.97 டி.எம்.சி.யாக சரிந்தது.

மேட்டூர் அணையில் உள்ள மீன் வளத்தைப் பாதுகாக்கவும், மேட்டூர்-ஆத்தூர் குடிநீர்த் திட்டம், சேலம் மாநகராட்சி தனிக் குடிநீர்த் திட்டம், காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம், கோனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொளத்தூர் குடிநீர்த் திட்டம், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மேட்டூர் நகராட்சி தனிக் குடிநீர்த் திட்டம் உள்ளிட்ட பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்காகவும் மேட்டூர் அணையில் 9.5 டி.எம்.சி தண்ணீர் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

தற்போது அணையின் நீர்மட்டம் குறைந்தபட்ச அளவை எட்டி உள்ளது. கடந்த 2014, ஏப்ரல் 25ஆம் தேதி அணையின் நீர் மட்டம் 9.69 அடியாக இருந்தது. அதன்பிறகு இப்போதுதான் நீர்மட்டம் குறைந்தபட்ச அளவை எட்டியுள்ளது.

காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் வரை டெல்டா பாசனக் கால்வாய் கரையோர கிராமங்களுக்கு குடிநீர்த் தேவைக்காகவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் அணையிலிருந்து அதிகபட்சம் நொடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர்

திறக்கப்பட வேண்டும். அதுவரை மேட்டூர் அணையில் இருப்பு உள்ள தண்ணீர் போதுமானதா என்பது கேள்விக்குறியே.

நீர்மட்டம் தொடர்ந்து சரிந்தால், பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது.

**பருவநிலை மாற்றங்களுக்கேற்ப விவசாயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்: ரமணன் வலியுறுத்தல்**



பருவநிலை மாற்றங்களை அறிந்து அதற்கேற்ப விவசாயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் வலியுறுத்தி உள்ளார்.

நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் காலநிலை இடர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது. உழவர் வயல்வெளிப்பள்ளி, வயல்தின விழா என்ற பெயரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், காலநிலை மாற்றங்கள் மற்றும் அதனை எதிர்கொள்ள விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் முன்னாள் வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

விவசாயிகள் வானிலை அறிக்கைகளை நன்கு கேட்டறிந்து அதன்மூலம் விவசாயத்தில் புதிய யுக்திகளை கையாண்டு விவசாயப் பணிகளை மேற்கொள்ளை வேண்டும். அவ்வாறு பருவநிலை மாற்றங்களை அறிந்து விவசாயம் செய்வதால் பாதிப்புகளை குறைக்க முடியும் என்று கூறினார்.